தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்:
C. N. அண்ணாதுரை M. A.,

"கோயிலுக் கொன்று கொடுத்திடல் அறமா?
கோடிகொடுக்கும் கல்வி தேடிடல் அறமா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. | காஞ்சிபுரம் 23—8—42 சித்திரபானு—ஆவணி 7—ஞாயிறு | இதழ் 25

## 24மணிநேரத்தில் சுயராச்யம்!

பரதன்.

சுயராஜ்யம்தானே வேண்டும்?

ஆமாம்! நிச்சயமாக அதுதான் வேண்டும்.

சரி! 24 மணிநேரத்திலே சுயராஜ்யம் கிடைக்கும் வழி இருக்கிறது.

என்ன? ஒரே நாளிலே சுயராஜ்யமா?

ஆமாம், தோழனே! ஒரே நாளிலே சுயராஜ்யம். ஓடும் ரயில்மீது கல்வீசத் தேவையில்லை! ரயில்வே ஸ்டேஷனைக்கொளுத்தத்தேவையில்லை! தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் நடக்கும்படி நிலைமையை உண்டாக்கத் தேவையுமில்லை, தபாலாபீசைச் சூறையாடத் தேவையில்லை. நாட்டிலே சஞ்சலமும் சங்கடமும், உண்டாக்கத் தேவையில்லை. இவைகளின்றி, மிக மிகச் சாதாரணமாக 24 மணி· நேரத்திலே சுயராஜ்யம் பெற வழி இருக்கிறது.

நான் நம்பமாட்டேன். அது எப்படி முடியும்? காங்கிரஸ் எத்தனையோ விதமான போராட்டங்களை நடத்திற்று. எத்தனையோ ஆயிரம்பேர் சிறை புகுந்தார்கள். அதனாலெல்லாம் வராத சுயராஜ்யம், 55 ஆண்டுக்கிளர்ச்சியினால் வராத சுயராஜ்யம், 25 வருட காந்தீயத்தால் வராத சுயராஜ்யம், 24மணிகோத்திலே அமளியின்றி, அல்லலின்றி எப்படி பரதா! வரமுடியும்?

தம்பி கேள்! நீ சொன்னாய், காங்கிரஸ் எத்தனையோ போராட்டங்களை நடத்திற்று, ஆனால் சுயராஜ்யம் வரவில்லை என்று, அதிலேதான் சூக்ஷமம் இருக்கிறது. தெரிந்துக்கொள். காங்கிரஸ் ஒன்றுமட்டும் காரியத்தை நடத்தினால், பலன் கிடைக்காது. நாடு செய்ய வேண்டும். நாட்டுமக்களின் ஏகோபித்த, ஒற்றுமையான கிளர்ச்சி வேண்டும். திராவிடரும் முஸ்லீம்களும், கலந்துத் தமது கையொப்பத்தை இடாமுன்னம், அந்தக் கிளர்ச்சிக்கு நாட்டு மக்கள் நடத்தும் கிளர்ச்சி என்ற பெயர் ஏற்படமுடியாது. காங்கிரஸ்நடத்தும் கிளர்ச்சியிலே விறுவிறுப்பு இருக்கலாம், மக்களை மருட்டவும் செய்யலாம் சர்க்காரைச் சங்கடத்துக்குள்ளாக்கலாம் சுயராஜ்யத்திற்கு இவை அறிகுறியாகாது. காங்கிரஸ் மட்டுமே கிளர்ச்சி செய்து வெள்ளையரை மிரட்டிவிரட்டிவிடுகிற தென்றே வைத்துக் கொள் தோழா, அது எற்றும் வெற்றிக் கொடி நெடுநாட்களுக்குப்பறக்கமுடியாது. அது கையாண்ட முறைகளையோ, அன்றி அதைவிடக்கடுமையான முறைகளையோ, இன்றோ, பிறகோ, இஸ்லாமியரும், திராவிடரும், கைக்கொள்வார்கள். அது சமயம் சங்கடமும் சஞ்சலமும் இன்றுள்ள அளவினதாக இராது. அதை மறக்காதே.

ஒற்றுமை வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லையே! எவ்வளவோ பாடுபட்டோம்அதற்காக. முடியவில்லை என்செய்வது?

பாடுபட்டால் பலன் ஏற்படாது போயிருக்குமா? இதோ இன்று நாட்டிலே காங்கிரசார் நடத்தும் கலகம், பலன்தரும் என்று நம்புகிறு

---

### திராவிடநாடு பிரிவினைக் கமிட்டி

**காஞ்சிபுரம்**

திராவிடநாடு பிரிவினைக் கமிட்டிக் கூட்டம் 31—8—'42 காலை 9-மணிக்கு காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீசில் நடைபெறும்.

அதுசமயம், திராவிடநாடு பிரிவினை சம்பந்தமாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் திராவிட நாட்டு எல்லை குறிப்பது, படம் தீட்டுவது ஆகிய காரியங்களைப் பற்றியும் தீர்மானிக்கப்படும்.

பெரியார்

செட்டிநாடு குமாரராஜா, S. முத்தையாமுதலியார்,
G. C. நெட்டோ, T. P. வேதாசலம்

முதலிய தலைவர்கள், கமிட்டிக் கூட்டத்திற்கு வருகிறார்கள்.

அன்று மாலை 6-மணிக்கு ஆடிசன்பேட்டையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். ஒலிபெருக்கி அமைக்கப்படும். தோழர்கள் அனைவரும் வருக.

**A. K. தங்கவேல் முதலியார்,**
பிரிவினைக் கமிட்டி காரியதரிசி.

யே, இதற்குச் செலவிடப்படும் சக்தியும் நேரமும், சுறுசுறுப்பும், நாட்டிலே ஒற்றுமையான திட்டம் ஏற்பட செலவிடப்படவில்லை. யோசித்துப் பார். உனக்கு என்ன வேண்டும்? சுயராஜ்யம் தானே!

ஆமாம்!

வெள்ளைக்காரன், சுயராஜ்யம்தர முடியாதென்று கூறிவிட்டானா?

இல்லை.

தருவதாகத்தானே சொல்லுகிறான்?

ஆமாம், ஆனால் சால்ஜாப்பு செய்கிறான்.

அது சகஜந்தானே தம்பி! என்ன சொல்கிறான்?

முஸ்லீம்லீகும், இதரகட்சிகளும் சம்மதிக்கட்டும் என்று கூறி விடுகிறார்கள்.

முஸ்லீம் லீக், நீதிக்கட்சி, முதலிய எந்தக்கட்சி யாவது சுயராஜ்யம் வேண்டாமென்று கூறினதுண்டா?

இல்லை.

பிறகு, அந்தக்கட்சிகளின் சம்மதத்தையும் சேர்த்துவாங்கி, வெள்ளைக்காரர் முன்பு வீசி எறியத்தடை என்ன?.

அந்தக்கட்சிகள், ஏதேதோ கூறுகின்றன. பாகிஸ்தான் திராவிடஸ்தான் என்று கேட்கின்றன.

அதிலேதவறு என்ன? நாம் சுயராஜ்யம் தேவை என்று சொல்வது தப்பா? அதைப்போலவே அவரவர்கள் ஒவ்வோர் இடத்தை ஆளுவோம் என்று கேட்பது எப்படித்தப்பாக முடியும்?

நாட்டைப் பிளந்தால், ஒற்றுமைஇராது, எதிரிகள் சுலபத்திலே அழித்து விடுவார்கள்.

இது அசல் பிரிட்டிஷ் வாதமல்லவா? அவனும், சுயராஜ்யம் கொடுக்க எனக்கு இஷ்டந்தான். ஆனால் கொடுத்தால் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி உங்களுக்கு உண்டா என்று தான் பயப்படுகிறேன் என்று பேசுகிறான். நீங்களும், அவரவர்கள் உரிமை கேட்பது சகஜந்தான், நியாயந்தான், ஆனால் பிரித்துக்கொடுத்து விட்டால், ஆபத்து என்கிறீர்கள். சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை, அதைக்கொடு, நாங்கள் எப்படியோ ஆண்டு கொள்கிறோம் எப்படியோ எங்களை நாங்களே காப்பாற்றிக்கொள்கிறோம், என்று நாம் வெள்ளைக்காரரைப் பார்த்துச் சொல்கிறோமே, அதே நியாயம், பாகிஸ்தானிகளுக்குப் பொருந்தாதோ!

எப்படியோ நடக்கட்டும். முதலிலே சுயராஜ்யம் வந்து விடட்டும். பிறகு பாகிஸ்தான் திராவிடஸ்தான் உரிமைகள் விஷயமாகக்கவனித்துக் கொள்வோம்.

தம்பி! நீ எப்படி, இஸ்லாமியருக்கும் திராவிடருக்கும் "வாய்தா" போடுகிறாயோ, அதைப்போலவே தான், வெள்ளைக்காரன், இந்த யுத்தம் முடியட்டும், உடனே சுயராஜ்யம் தருகிறேன் என்று "வாய்தா" போடுகிறான். சுயராஜ்யத்துப் பிறகு சமரசம் என்ற பேச்சை நீ விட்டுவிட்டு இப்போதே சமரசம்செய்து கொள். 24மணி நேரத்திலே சுயராஜ்யம், கிடைக்கிறது பார்!

ஒற்றுமை இல்லையே!

நான் சொன்னதைத்தானே மறுபடியும் நீ சொல்கிறாய். சரி இதோ இரு. ஆமாம்! இந்தப் பாட்டைக் கேள் சற்றுநேரம்.

பாட்டுக் கேட்கவா நான் வந்தேன்?

பாட்டு மட்டுமில்லை. இதிலே பேச்சுமிருக்கிறது. கேள் கொஞ்சம்.

இது, N. S. கிருஷ்ணன் காமிக்! சகுந்தலைபடம். ஆயிரம் தடவை கேட்டிருக்கிறேன்.

இப்போ ஒருதடவை கேள். கேட்கவேண்டிய இடம் இதுதான்.

என்னடா, நமக்குள்ளே ஒத்துமே வேணுமாடா
நீ என்னை மோசம் செய்யலாமாடா
நீ இதிலே பங்கு கேக்கலாமாடா
அப்ப ஒண்ணு செய்வோமாடா
என்ன மாடா?

ஆளுக்குப்பாதியா அறுத்து எடுத்துக்குவோம்.

ஆ! எனக்கு முழு மீனுதான் வேணும்.

முழுமீனு வேணும்னா நான் புடுங்கி தண்ணிலே போட்டேன்.

நீ மட்டும் தண்ணிலே போடு, உன் தலையைக் கிள்ளித் தண்ணிலே போட்டு போடறேன்..........

போதும்! இதைத்தான் தம்பி நீகேட்கவேணும். நாடு, இந்த நிலையில்தான் இருக்கிறது. இதற்கு வழி கண்டுபிடிக்காமல் நாம் வாழமுடியாது. ஜுரம் அடிப்பதைப் போக்க, குளிர்ந்த நீரிலே உட்கார்ந்து உடம்பைக் குளிரச்செய்துவிட முடியாது. ஈரத்துணியை உலரவைக்க, அதை எறிகிற நெருப்பிலே போட்டு எடுக்கவும் முடியாது.

இதெல்லாம் வெறும்பேச்சு! இந்தஜின்னா, நாயக்கர் கூட்டமெல்லாம் ஜெயிலுக்கு வராது.

அப்படி எண்ணாதே தோழனே. பெரியார் எட்டு முறை ஜெயிலுக்கு போயிருக்கிறார்.

ஜின்னா விஷயம் என்ன?

அதைத்தான் சொல்ல வந்தேன். இதோ கேள், அவருடைய அருமையான அறிக்கையை. அவர்தான் 24மணி நேரத்திலே சுயராஜ்யம் பெறமுடியும் என்று கூறியிருக்கிறார் இதோ நான் படிக்கிறேன், கவனமாகக்கேள்.

## ஜனாப் ஜின்னா தெரிவித்த விவரம்.

பம்பாய். ஆக 16—

"உடனே முஸ்லீம் லீகுடன் ஓர் முடிவைச் செய்துக்கொண்டு அதன்மூலம் நிரந்தரமாகஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படும்படி செய்யும் பட்சத்தில் நானே இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை நடத்துவேன். மகாத்மா காந்தியுடன் சிறை செல்வதில் நான் முதல்வனாக விரும்பேன்" என்று முஸ்லிம் லீக் தலைவரான ஜனாப் எம். ஏ ஜின்னா பம்பாய் காங்கிரஸ் தலைவர் ஒருவரிடம் தற்கால அரசியல் நிலைமைபற்றி விவாதித்தபோது கூறினார். உடனே சுதந்திரம் வேண்டுமென்பது முஸ்லிம் லீகின் கோரிக்கையென்றும் ஆனால் இதற்குக் காங்கிரஸ் தடையாயிருக்கிறதென்றும் ஜனாப் ஜின்னா வற்புறுத்தினார்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காக நடத்தப்படும். எந்தப் போராட்டமும் வெற்றிபெற வேண்டுமாயின் அதற்கு ஒற்றுமை இன்றியமையாதென்றும் முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கைக் கிணங்குவதாலேயே அந்த ஒற்றுமை ஏற்படும் என்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார்.

## 24 மணி நேரத்தில் சுதந்திரம்.

ஜனாப் ஜின்னா மேலும் தெரிவித்ததாவது:—

ஒற்றுமை ஏற்பட்டவுடன் முஸ்லிம்கள் காங்கிரஸுடன் சேர்ந்து பிரிட்டிஷாரிடமிருந்து பரிபூர்ண சுயேச்சை வேண்டுமென்று கோருவார்கள். பிரிட்டன் இதை மறுக்கமுடியாது. 24-மணி நேரத்தில் நாம் சுதந்திரத்தைப் பெறுவோம். இல்லையாயின் இதர முஸ்லீம் தலைவர்களுடன் விடுதலைப் போராட்டத்தில் நான் முன்னணியில் நிற்பேன்.

பாகிஸ்தான் பிரச்னைபற்றி முடிவுசெய்ய அரசியலை அமைக்கும்போது இந்திய முஸ்லிம்களிடையே ஓட்டு எடுக்கலாமென்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். ஆனால் காங்கிரஸ் மேற்சொன்னவாறு தெளிவான முறையில் அறிவித்து முஸ்லிம்களின் சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டும், என்று அவர் கூறியுள்ளார்.

(9ம் பக்கம் பார்க்க)

# திருமண அழைப்பு.

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு ஆவணி கசு-ம் நாள் (30-8-42) ஞாயிற்றுகிழமை காலே 8-30 மணிக்கு,

எனது மகன் செல்வன் த. சாம்பசிவனுக்கும்

சென்னே சிந்தாதிரிப்பேட்டை திரு. V. N. கண்ணப்பமுதலியார் அவர்கள் மகள் செல்வி

மங்கையர்க்கரசிக்கும்

காஞ்சிபுரம் கோட்ராம்பாளையத் தெரு 39-நெ. கந்தன் இல்லத்தில் சென்னே உயர் திருவாளர் S. முத்தையா முதலியார் B. A., B. L., C. I. E. மாஜி மந்திரி, அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தாங்கள் அனைவரும் வந்து மணமக்களைவாழ்த்த வேண்டுகிறேன்.

தங்களன்பன்,

**அ. க. தங்கவேல் முதலியார்,**

கந்த விலாஸ் ஜவுளி வியாபாரம் காஞ்சிபுரம்.

---

தங்கள் வரவை எதிர்பார்க்கும்:—ஆ. இராமசாமி முதலியார் சாந்தீஸ்வரர் கோயில் தர்மகர்த்தா.

மு. பொன்னுசாமி முதலியார், முனிசிபல் கௌன்சிலர், காஞ்சிபுரம்.

மு. ரத்தின முதலியார் டைரெக்டர் கூட்டுறவு பட்டு நெசவாளர் சங்கம் காஞ்சிபுரம்.

அ. க. நடேச முதலியார், கௌரவமாஜிஸ்ட்ரேட் காஞ்சிபுரம்.

---

## நிகழ்ச்சி முறை-

29—8—42 சனிக்கிழமை

இரவு 7-00 மணி விளக்கடி கோயில் வீதி 75-நெ. வீட்டிலிருந்து ... பெண் அழைப்பு

30—8—42 ஞாயிற்றுக்கிழமை

காலே 8-30 மணி ... ... திருமணம்

,, 9-10½ ,, ... ... மணமக்கள் வாழ்த்து

,, 11-00 ,, ... ... மணவிருந்து

இரவு 6-00 ,, (இசை அரசு M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்) பாட்டு

இரவு 9-00 மணி (காஞ்சிபுரம் திருமதி சரஸ்வதி அம்மையார்) பாட்டு

மாலே 5-00 மணி கந்தன் பூஞ்சோலே திறப்புவிழா (ரெயில்வே ரோட்)

,, 5-30 ,, தங்கவேல் கழகம். திறப்புவிழா (ரெயில்வே ரோட)

திரு. M. மீனுட்சிசுந்தரம்பிள்ளே (முனிசிபல் கமிஷனர் காஞ்சிபுரம்) அவர்களால் நடைபெறும்.

## தீவிர இளைஞர் மாநாடு

மேற்படி மாநாட்டை செப்டம்பர் 6ந் தேதி காஞ்சீபுரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.


## ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக் செய்யவேண்டும்.

வாக்குச்சாதுர்யமாகப் பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150-முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

**ஜில்லாக்கள்.**

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி. | 7. வடஆற்காடு |
| 2. மதுரை | 8 செங்கற்பட்டு |
| 3. திருச்சிராப்பள்ளி | 9. கோயம்புத்தூர் |
| 4. தஞ்சாவூர் | 10. நீலகிரி |
| 5. இராமநாதபுரம் | 11. சேலம் |
| 6. தென்னாற்காடு | 12. சித்தூர். |

**கே. எஸ். முத்தையா கம்பெனி,**

சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபித்தது 1909.)


## கண்டனம்.

சட்ட மறுப்புக் கண்டனக்கூட்டம் இன்று திருநெல்வேலி ஜில்லா, கோவில்பட்டி தாலுகா புதூரில், மிகுந்த குதூகலத்தோடு நடைபெற்றது. இங்குள்ள இந்து நாடார் உயர்தரப் பாடசாலையில் மாலே 4-30 மணிக்கு சுமார் 400 பேருக்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. 5 மணிக்கு சுமார் 1000 பேரடங்கிய ஒரு மாபெருங் கூட்டம் மேளவாத்தியத்துடன் ஊர்வலம் சென்று இறுதியில் இந்து நாடார் உயர்தரப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் தோழர் N. V. S. பெருமாள் நாய்க்கர் தலைமையில் கூடியது. தோழர் இமனுவேல் கடவுள் வாழ்த்துப்பாடியபின் ஐந்து கனதனவான்கள் அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியின் சட்ட மறுப்பு இயக்கத்தைக் கண்டித்துச் சொற்பொழி வாற்றினர்கள். அச்சமயம் வசூலான தொகை ரூ 100 மேன்மைதங்கிய சென்னே கவர்னருக்கு அனுப்பவேண்டும் என்று தீர்மானஞ் செய்யப்பட்டது.

---

## "தமிழ் நிலம்"

குடியேற்றம் தோழர் மு அண்ணல் தங்கோ அவர்களை ஆசிரியராகக்கொண்ட தமிழ் நிலம் எனும் கிழமை வெளியீடு, விரைவில் வெளி வருகிறது.

காஞ்சியில்

## சக்திவேல்

கோஷ்டி

### நாதஸ்வரக் கச்சேரிகள்

திருவாவடுதுறை நாதஸ்வர வித்வான்.

தோழர்கள் சக்திவேல்—நாதஸ்வரம்
ராமச்சந்திரன்— ,,
சிவக்கொழுந்து—தவுல்

23-8-42 ஆடிசன்பேட்டையில் R.V. பிக்சர்ஸ்

**தோழர் வரதன் திருமணத்திலும்**

24—8—42 சின்னகாஞ்சிபுரம் பொன்னன் பூஞ்சோலை திறப்புவிழாவிலும்

26—8—42 சின்னகாஞ்சிபுரம் பார்ப்பன ரல்லாதார் இளைஞர்கழகக் கட்டடத்தில்

தோழர்கள்
சக்திவேல் } நாதஸ்வரம்
ராமச்சந்திரன் } (தம்பூராஸ்ருதியுடன்)
குப்புசாமி—பிடில்
சிவக்கொழுந்து—கஞ்சிரா
T. P. S. பொன்னப்பன்—மிருதங்கம்

30—8—42 (காலை) தோழர் சாம்பசிவம் திருமணத்துக்கு கோட்ராம்பாளையத்தில்

30—8—42 (மாலை) ரயிலடிக்கருகில், கந்தன் பூஞ்சோலை திறப்புவிழாவின்போது.

இசைவிருந்து விரும்புவோர் நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்து வாத்தியக் கோஷ்டியின் இசையைக்கேட்டு இன்புற வேண்டுகிறோம்.

## வானம்பாடி வெளியீடுகள்!

பகுத்தறிவூட்டும்

**பெரியபுராண ஆராய்ச்சி.**

முதல் பாகம் ... 0—6—0.
இரண்டாம்பாகம் ... 0—2—6.
மூன்றாம் பாகம் ... 0—3—0

நாலாவது பாகம் அச்சிலிருக்கிறது.

புரட்சிக்கருத்தும்,
தமிழ்ச் சுவையும் தரும்,
பாரதிதாசன் இயற்றிய

**எதிர்பாராத முத்தம் 0—8—0**

சௌமியன் எழுதிய சமுதாயச் சித்திரம்

**குமஸ்தாவின் பெண்தான்!**

அச்சிலிருக்கிறது.

**ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்**

[காஞ்சிபுரம் டாக்டர் C. K. குப்புசாமி எழுதியது] விலை 0—6—0

## வடாற்காடு ஜில்லா பாசிச எதிர்ப்பு மாநாடு

வடாற்காடு ஜில்லா பாசிச எதிர்ப்பு மாநாடு, செப்டம்பர் மாதத்தில் திருவத்திபுரத்தில் நடத்த ஏற்பாடாகி இருக்கிறது. வரவேற்புக் கமிட்டித் தலைவர் தோழர் கந்தசாமி. டிவிஷனல் ஆர்கனைசர் அவர்கள். மாநாட்டுத் தலைவர். தோழர் P. பாலசுப்பிரமணிய முதலியார், சண்டே அப்சர்வர் ஆசிரியர். திறப்பாளர், கவர்னர் ஆலோசனையாளர் மிஸ்டர் ருதர் போர்டு—என்று தோழர் S. V. லிங்கம் தெரிவிக்கிறார்.

## நாஞ்சி நாடு வியாபாரச் சங்கம்,

### நாகர்கோவில்.

## ஆண்டு விழா

நாஞ்சி நாடு வியாபாரச் சங்கத்தின் ஆண்டு விழாக்கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு கோட்டாறு வலம்புரிசெட்டியார் கட்டிடத்தில் திருவிதாங்கூர் சட்டசபை மெம்பரும் பத்திராதிபருமான உயர்திரு D. C. ஜோசப் அவர்கள் தலைமையில் கூடிற்று.

சங்கத்தலைவர் S. இராமசுப்பு செட்டியார் B. A. அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப்பின் சங்க அமைச்சர் R. இராமலிங்கப் பணிகர் அவர்களால் ஆண்டறிக்கையும் வரவு செலவு கணக்கும் வாசிக்கப்பட்டன.

திருவாளர்கள், சி. ந. சுப்பிரமணியப் பிள்ளை S. M. மகாலிங்க முதலியார் R. இராமலிங்கப்பணிக்கர் ஆகியவர்களால் வியாபார சம்மந்தமான சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) போரின் காரணமாக ஆகாரப்பொருள்களின் விலை ஏறுவதை வியாபாரிகள் மனப்பூர்வமாகக் கூட்டுவதாக கவர்மெண்டார் நினைப்பதைப் பற்றி இக்கூட்டம் மிகவும் விசனிக்கிறது.

(2) ஆகாரப்பொருள்களின் விலையை ஒருபிரசுரத்தின் மூலம் நிர்ணயித்து கட்டுப்படுத்தாமல் போலீசார் அடிக்கடி வந்து வியாபாரிகளிடம் தாறுமாறாக விற்கும்படி வற்புறுத்துவதால் வியாபாரிகளுக்குமிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்து ஒரு தகுந்த ஏற்பாடு செய்யும்படி இக்கூட்டம் கவர்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது.

(3) நாஞ்சி நாட்டில் ஆகாரப்பொருள்களின் விலைகளை திட்டப்படுத்தி கட்டுப்பாடு செய்ய வியாபாரிகள் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தி அந்தகமிட்டியின் ஆலோசனையில் காரியங்கள் நடத்தினால் நலமாயிருக்குமென இக்கூட்டம் கவர்மெண்டாரை வேண்டிக் கொள்ளுகிறது.

தலைவர் அவர்கள் முடிவுரைப் பிரசங்கத்தை முடித்ததும், சங்கப்பொருளாளர் சு. சண்முகப்பணிக்கர் அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இரவு 8-மணிக்குக் கலைந்தது.

R. இராமலிங்கம்,
அமைச்சர்.

தொடர் கதை

# கலிங்கராணி

[ சௌமியன். ]

முன்பு:— வீரமணியும் நடனராணியும் காதலிக்கின்றனர். வீரமணி, குலோத்துங்க சோழனின் குதிரைப் படைத்தலைவன். நடனராணி அரண்மனைத் தோழி. கலிங்கத்துடன் மன்னன் போர் தொடுக்கிறான், காஞ்சிமுகாமில். நடனராணி அரண்மனையிலே இருக்கிறாள்.

"அடி! கங்கா! உங்கள் நாட்டுக்கதை ஏதாகிலும் சொல்லேன் கேட்போம்" என்று அம்மங்கை கேட்க, ஆரியப் பெண், "ஆயிரக் கணக்கிலே உண்டு கதைகள் அவைகளிலே உமக்குப் பிடித்தமானது எதுவாக இருக்குமென்றே யோசிக்கிறேன்" என்றுரைத்தாள். நடனராணி, 'ஏதையோ ஒன்றுசொல்லு கேட்போம்' என்றாள். அரசிளங்குமரி, "வீரக் கதைகள் கூறு" என்றுகூற, நடனராணி சிரித்துக்கொண்டே, "அது கிடையாது" என்றுரைத்தாள். "ஏனில்லை, ராணி? பத்துத்தலையும் இருபது கரங்களும் கொண்டு, அஷ்டதிக்குப் பாலகர்களை வென்று, மாயாஜாலம் மகேந்திரஜாலம்கற்று மாவீரனெனப் பெயரெடுத்த ராவணனை எங்கள் ராமபிரான் சம்ஹாரம் செய்ததும், இலங்கையை நிர்மூலப்படுத்தியதும், வீரமில்லையோ, எங்கள் இனத்தினிடமே இந்த நடனாவுக்குத் துவேஷம். நாங்களும் வீரமான இனந்தான்" என்று கங்கா கோபித்துக்கூறினாள். நடனம் சாந்தமாகவே பதிலுரைத்தாள், "அடிபாலா! நீசொன்ன கதை, மனிதனுடையதல்லவே. மஹாவிஷ்ணுவின் அவதாரக் கதையென்று தானே உங்கள் புராணம் கூறுகிறது. அரசியார்கேட்டது, சாதாரண மக்களிலே வீரராக இருப்பவரின் கதையைத்தானே. கடவுளின் கதையல்லவே. 'கடவுளின் வீரம் தீரம் பராக்கிரமங்கள்பற்றி கதைவேண்டுமோ. கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்தவர் என்றுதானே பொருள். ராமரின் வீரத்தைவிட அந்தப் புராணமூலம், வாயுவாஸ்திரம் வருணாஸ்திரம், அக்னியாஸ்திரமாகிய வைகளின் வேடிக்கைகள் தான் அதிகமாக விளக்கப்படுகின்றன. அரசியார் அதைக் கேட்கவில்லை. உங்கள் நாட்டு வீரர் கதை ஏதேனும் கூறச் சொன்னார்கள். சொல்லு இருந்தால்" என்று நடனம் விளக்கினாள். கங்கா, "எனக்கொன்றும் கவனமில்லை" என்றுகூறி முகத்தைச் சுளித்துக் கொள்ளவே, அரசிளங்குமரி, "இதென்ன வம்பாகிவிட்டது. வீரக்கதை கிடக்கட்டும். மாதரைப் பற்றிக் கூறு" என்றாள். கங்கா மௌனம் சாதித்தாள். "நீ கூறு நடனா, பாலாவுக்குக் கோபம் அடங்கட்டும்" என்று அம்மங்கை கூறிட, நடனம் கதை சொல்லத் தொடங்கினாள். "தேவி! இது நம்நாட்டுக் கதையல்ல. கங்கைக் கரையோரத்துக் காதல் கதை என்று ஆரம்பிக்கும்போதே, கங்கா, "தேவி! வேண்டுமென்றே நடனம் என்னை அவமானப்படுத்தப்போகிறாள், அதற்காகவே கதை சொல்ல முன்வந்தாள். நான் பூத்தொடுக்கப்போக உத்திரவு கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள். அம்மங்கை, "சரி! சரி! உங்கள் சண்டையும் வேண்டாம் கதையும்வேண்டாம்" என்றுகூறிவிட்டாள்.

நடனராணிக்கும் அம்மங்கைக்கும் விரோதமூட்டிவிடவேண்டுமென்பதே, பாலாவின் திட்டம். ஏற்கனவே அம்மங்கை தன்னிடம் பிரியமாக நடக்கும்படியான வழியை உண்டாக்கிக் கொண்டாள். ஆனால் தன்னை நடத்துவதைப் பார்க்கிலும், அம்மங்கை நடனராணியையே அதிகமரியாதையாக நடத்துவது கங்காவுக்குப் பிடிக்கவில்லை. எப்படியேனும், நடனத்தைஅவளிருந்த பீடத்திலிருந்தும் கீழேஇறக்கிவிட வேண்டுமென்று துணிவுகொண்டாள். நடனத்துக்கு அரண்மனையிலே வளர்ந்துள்ள செல்வாக்கு, வீரமணியின் உயர்வுக்கும் பயன்படும். வீரமணியின் உயர்வு, தமிழரின் நிலையை உயர்த்தும், தமிழர்நிலை உயருமானால் ஆரியருக்கு அந்நாட்டிலே வேலையில்லை. ஆரிய குலத்தில் பிறந்து இன உயர்வுக்குப் பாடுபடாது இருப்பதோ! எதற்கு இந்த ஜென்மம்! என்று எண்ணி ஏங்கினாள் பாலா. தன்மீது கங்கா, காய்ச்சல் கொண்டிருப்பதை ஒருவாறு நடனம் உணர்ந்தாளே யொழிய, தன்னைக் கவிழ்க்கவும் சதிசெய்வாள் என்று கருதவில்லை. 'நாம் அவளுக்கு ஒருதீங்கும் செய்தோமில்லை. நம்மை அவள் என்ன செய்யமுடியும்?" என்று கருதினாள். அம்மங்கையின் செவியிலே ஆரியப்பெண்ணின் கலகம்புகாது என்று நம்பினாள்.

இந்நிலையில், கலிங்கநாட்டின்மீது மன்னன் போர் தொடுத்த செய்தியைச் சேவகன் கொண்டுவந்தான். நடனம், திகைத்தாள். காதலன் வருவான் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு, கலிங்கக் களம்புகுந்தான என்றால், கஷ்டம் விளையாதோ. அவளுடைய நிலையை உணர்ந்த அம்மங்கை, "நடனம்! உன் காதலனுக்குக் குதிரைப்படைத்தலைவன் பதவியைத் தந்தாராம் மன்னர். அதற்குச் சன்மானம் உண்டு! என்னதெரியுமோ? களத்திலிருந்து வீரமணி திரும்பியதும், திருமணம். திருமணம் நடக்கும்போது, பரிசாக அழகிய கிராமம் தரப்படும் மன்னரால். நான் ஓர்முத்துமாலை தருவேன் பரிசாக" என்று கூறினாள். நடனராணி வேதனையை மறந்து, வெட்கித் தலைகுனிந்து "தங்கள் அருள் இருப்பின் போதும் அம்மையே" என்று சொன்னாள். பெருமூச்சை கங்கா அடக்கியபடி, "எப்படியோ, நடனமாடி, கண்ணையும் கையையும் காட்டி மயக்கிவிட்டாய். சரியான ஆள்சிக்கிவிட்டார். உனக்கு யோகந்தானடி நடனம். ஆனால், கலிங்கப்போரிலிருந்து உன் காதலன் திரும்பி வரவேண்டும். கௌரிபூஜை செய்" என்று கேலிசெய்ய, நடனம் வெகுண்டு, "கௌரி பூஜை நான் செய்துப் பயனென்ன? அவருடைய கண் ஒளியும் வாள் ஒளியும் கூர்மையாக இருக்கும்வரை வெற்றி ஒலி கேட்டுத்தானே தீரும். அவர்சாமான்யமானவரா?" என்று பூரிப்புடன் பேசிட, இதுதான் சமயம் என்றுணர்ந்த பாலா, "தொண்டைமானிடம் இவன் என்ன செய்யமுடியும்?" என்று கேட்டு, நடனத்தின் வாயிலிருந்து ஏதேனும் வம்புவெளிவராதா என்று எதிர்பார்த்தாள். "தொண்டைமான் தீரர். என் காதலரும் வீரரே. மாற்றுக்குறைந்தவரல்ல" என்று நடனம் பதிலுரைத்தாள். கங்கா, கலகலவெனச் சிரித்துக்கொண்டே, "அவர் மாற்றுக்குறையாதவர் தான். ஆனால்........" என்று இழுத்தாள். "நான் மாற்றுக்குறைந்தவள் என்று கூறுகிறாயா" என்று நடனம் கோபக்குறியுடன் கேட்கவே, அம்மங்கை மீண்டும், அமளிவந்துவிடப் போகிறதென்று அஞ்சி, "கங்கா, என்ன இருந்தாலும் உனக்கு வாய்த்துடுக்குதான்" என்று கடிந்துரைத்து, பாலாவின் வாயை அடக்கினாள்.

"ஆமாம்! நான் ஒரு நாட்டியக்காரிதான். பரத்தையின் வளர்ப்புப் பெண். இதைத்தானே நீ குறிப்பிட்டாய். இதுதானே, என் மாற்றுக்குறைவு! பேஷ்! கங்கா! என் பிறப்புக்காக நான் வெட்கப்படவில்லை. என் நடனத்திற்காக நான் வெட்கப்படத் தேவை

8-ம் பக்கம் பார்க்க.

காஞ்சீபுரம் பண்ட்ஸ் Ltd.,
காஞ்சிபுரம்
மாதம் ரூ. 25 சம்பளத்தில், நம்பிக்கையும் செல்வாக்குமுடைய ஏஜண்டுகள் ஒவ்வொரு ஊரிலும் தேவை. மற்ற விவரங்களுக்கு 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.
K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு
ஞாயிறு] 23—8—42 [காஞ்சி.

# 1942ல் மாஸ்கோ!

"நான் மறுபடியும், 1947ல் மாஸ்கோ சென்று பார்க்கவேண்டுமென பேரவாக் கொண்டிருக்கிறேன்" என்று தோழர் சக்லத்வாலா, 1934 ஆகஸ்ட் 12ந்தேதி லண்டனிலே கூறினார். ஒரு முறை மாஸ்கோவைக் கண்டவர்கள், மீண்டும் அதைக்காண அவாக்கொள்வதும், மாநில முழுவதுமே மாஸ்கோ மணம் பரவச் செய்ய வேண்டும் என்ற மனஎழுச்சி பெறுவதும் இயல்பு. உலகத்தை அதிரக்கூவிய நகரமல்லவா மாஸ்கோ! உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் உடலை வளைத்துப் பிழிந்துச் சாறுக்கிப் பிறருக்கு பனிநீர் போன்ற இன்ப வெள்ளத்தை உண்டாக்கித்தந்து, தாம் வாழ்க்கையிலே வறியராய், ஒட்டிய வயிரும் உலர்ந்த உதடும், காய்ந்த தலையும், பஞ்சடைந்த கண்களும், குழிவிழுந்த கன்னங்களும் கொண்டோராய்ப் பரதவித்த பாட்டாளிமக்களை, வாழ்க்கையின் கூட்டாளிகளாக்கி, கோழைகளை வீரர்களாக மாற்றி, கொடுங்கோலால் குத்தப்பட்டுக் குலைநடுக்கங் கொண்டிருந்தோரை கூன்நிமிர்த்தி, பயம்போக்கி, உரிமைக்காகப் போரிடும் அஞ்சா நெஞ்சர்களாக்கி, புனல்சொரியும் கண்களிலே கனல் எழச்செய்து, கூப்பிய கரங்களைமடக்கி நீட்டி, மார்தட்டச்செய்து, ஆமைபோல் அஞ்சியவர்களை ஆண்மையாளராக்கி, சாவுகோரி நின்றவர்களை வாழச்செய்து, ஜாரின் எடுபிடி ஆட்களாக இருந்தவரை விரட்டிடும் வீரர்களாக்கி, அன்றெழுதியதை அழிக்கமுடியும் என்பதனை உலகுக்கு விளக்கி, வீர முழக்கம்செய்து, வெற்றிவெண்பா பாடி, விருதுநகராக விளங்குவதன்றோ மாஸ்கோ! ஜாரின் படைகள் தடபுடலாக நடமாடும் ஒருபுறத்திலே! குட்டிக் குபேரர்கள் கூத்தாடுவர் மாளிகையிலே. சாலைஓரத்திலே செத்துக்கிடப்பர் பஞ்சைகள். தூக்கு மேடையிலே தொங்கிடும் சில உருவங்கள். குடி ஒருபுறம், மடிமற்றோர்புறம், மடமை ததும்பும், எங்கும் இடி, எவர்க்கும் இருப்புத் தடியடி, மாஸ்கோ, மக்களைக் கசக்கிடும் களமாக இருந்தது. குபேரர்களின் குச்சுவீடாகிக் கிடந்தது. ஜாரின் ஆணவக்கூடம், ரஸ்புடீனின் சசாபாசமடம், பாதிரிகளின் பாதகச்சாலை, ராணுவ வெறியரின் விளையாட்டு வெளியாக இருந்தது மாஸ்கோ. அதனை மாபெரும் புரட்சிக்களமாக்கி, கறை நீக்கி, கரைமீறி, தனி உடைமையைத் தகர்த்த தலம் இது வென்றாக்கினர் வீரர்கள்.

அத்தகைய மாஸ்கோவை மூன்றுவது முறையாகக் கண்ட சக்லத்வாலா, மீண்டும் காணவேண்டும்என் றுரைத்தார். ஏன்?

"மாஸ்கோ நகரமானது ஐரோப்பா கண்டத்திற்கே தலைநகராக விளங்காவிட்டாலும், மற்ற நகரங்கள் அதைப் பின்பற்றி நடந்துகொள்ளக் கூடிய ஒரு வழிகாட்டியாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளத் தக்க நிலையை அடையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒற்றுமை. வலிமை, முன்னேற்றம் ஆகியவைகளைக் கற்றுக் கொள்வதற்கு எல்லா தேசத்து மக்களும், மாஸ்கோ நகருக்குச்செல்ல வேண்டியதான ஒரு யாத்திரை ஸ்தலமாகவும் அது சீக்கிரத்தில் விளங்கும்" என்று சக்லத்வாலா கூறினார்.

அந்தக் தலத்துக்குச் சென்றவாரம், பிரிட்டிஷ் முதலமைச்சர் மிஸ்டர் சர்ச்சில் சென்றிருந்தார், ஸ்டாலினைக் கண்டார், கலந்துபேசினார், உயர்தர அதிகாரிகள் உடனிருந்தனர், நம் உபகண்டத்தின் படைத் தலைவராக உள்ள ஜெனரல் வேவல் உடனிருந்தார்!

மாஸ்கோவில், சர்ச்சில்! சோவியத் தலைவருடன் பிரிட்டிஷ் முதலமைச்சர்! எவ்வளவு விந்தையான மாறுதல்!! எத்தகைய இன்பகரமானமாறுதல்! நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சி!!

மாஸ்கோ மக்கள் சென்ற ஆண்டு மனம் பதறினார்கள், அவர்களின் வாயிலிலே வந்துநின்று நாஜிகள் கொக்கரித்தனர், அரசாங்க நிலையங்கள்கூட வேலி இடத்துக்கு மாற்றப்பட்டு விட்டன. ஒரு கையிலே சுழல் துப்பாக்கி மற்றோர் கரத்திலே சுவஸ்திகக் கொடிதாங்கி, வந்தேன், கண்டேன், வென்றேன், என்ற பாடலுடன், நாஜிகள் வாயிலிலே நின்றனர். மாஸ்கோ, மக்கள், தங்கள் மார்புகளையே மதில்களாக்கொண்டு, தெருக்களையே களங்களாக்கி, வீடுகளைக் கோட்டைகளாக்கி, "தயார்" என்றனர். மாஸ்கோ நகருக்குவர இருந்த ஆபத்து, பறந்தது! மாஸ்கோ, மீண்டும் உலகின் வீரமணியாக விளங்கலாயிற்று. அத்தகைய மாஸ்கோவிலே, பிரிட்டிஷ் முதலமைச்சர் சென்று தங்கியதும், கலந்துரையாடியதும், சரித்ர சம்பவங்களிலே முக்கியம் வாய்ந்ததாகும்! ஸ்டாலினும், சர்ச்சிலும், ஒருவர் பக்கத்திலொருவர் அமர்ந்த போது, கண்ட மக்களின் மனதிலே என்னென்ன கருத்துக்கள் தோன்றியிருக்கும். கம்யூனிஸ்ட் ஸ்டாலின் தந்த தீக்குச்சிகொண்டு கன்சர்வெடிவ் கட்சித் தலைவர் தமது சுருட்டைப் பற்றவைத்திருப்பார், ரஷிய நாட்டு மக்களின் பிரியமான பானமான "வோட்கா"வை, ஸ்டாலின்தர சர்ச்சில் ருசிபார்த்திருப்பார், இவையல்ல, நாம் வியந்திடுபவை. புரட்சியின் உருவம் ஸ்டாலின்! சர்ச்சிலோ, சட்டதிட்டம், கட்டுப்பாடு, விவாதவிளக்கம், ஆகிய முறைகளைக் கொண்ட இறையின் பிரதிநிதி! தீப்பொறி ஒன்று! தீட்டுகோல் மற்றொன்று! இருவரும் வீரர்! இருவரும், இடுக்கணிலே சிக்கியுள்ள இருண்ட உலகின் விளக்குகள், வழிகாட்டிகள். இருவரின் எண்ணமும், பெர்லினிலே கிளம்பியுள்ள பேயனை வீழ்த்தவேண்டும் என்பதாகும். தணலிலே வெந்த தங்கம் இலண்டன்! மண்ணை இரத்தக் குழம்பாக்கியும் மருட்சியடையாத மனப்பான்மையின் சித்திரம் மாஸ்கோ. மாவீரர் இருவரும் கூடிப்பேசியது, விரைவினில், "இரண்டாம் போர்முனை இதோ" என்று பீரங்கி வேட்டுமூலம், வெடிகுண்டு வீசிடுவதன்மூலம், வீரர்கள் முழக்கம் செய்வதன்மூலம், உலகினோரின் செவிகளிலே கேட்கும் நிலைமையை உண்டாக்கவேண்டும். உலகு அதைத்தான் எதிர்பார்க்கிறது.

சோவியத் நாடு சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்தது. சோர்வின்றி, துணையின்றி, செயலாற்றி வருகின்றது. மாஸ்கோ, லெனின்கிராட், வாரனேஷ், காலினின் முனைகளிலே, சோவியத்படைகள் வெற்றிகள் கண்டன என்பதுஉண்மையே!

மே மாதம் 15ந் தேதியிலிருந்து ஆகஸ்ட் 15ந் தேதி வரையிலே, சோவியத் களத்திலே 770000 ஜெர்மன் வீரர்கள் கைது செய்யப்பட்டனர். 480,000 ஜெர்மானியர் வெட்டி வீழ்த்தப்பட்டனர். 3390 ஜெர்மன் டாங்கிகள் நொறுக்கப்பட்டன, 4000 பீரங்கிகள் பாழ்பட்டன, 4000 விமானங்கள் வீழ்த்தப்பட்டன.

இத்தகைய பிரமாண்டமான பலி கொடுத்துத்தான் ஜெர்மனி, ரஷியாவிலே சில பிரதேசங்களைப் பிடித்தது. ஆனால், ரஷியப் படைபலம் குன்றவில்லை. மார்ஷல் வாஷிலாவ், புதுப்புதுப் படைகளைத் திரட்டுகிறார், பயிற்சி தருகிறார், பாய்வதற்கு அவை தயாராக உள்ளன.

யுக்ரேனையிழந்து ரஸ்டாவ், செபாஸ்டபூலையிழந்து காகசஸை எதிரி கண்டதுண்டமாக்குவதைக் காணும் கஷ்டத்தை அனுபவிக்கிறது. கலங்கவில்லை. ஆனால் கல்லும்கரையும் அந்த மக்கள் படும்பாடு கேட்டு! வெல்லும் வகையறிவர் அம்மக்கள். வீர நெப்போலியனை விரட்டிய காதை அறிவர் அம்மக்கள். வீழ்வோம், அதுவே கதியாயின் ஆனால் பணியோம் என்பதே அவர் தம் பாணி. ஆம்! ஆனால் இன்னம் எத்தனை நாட்களுக்குச் சோவியத்நாடு, ஜெர்மனி, பின்லந்து, ருமேனியா, பல்கேரியா, இத்தாலி, பணிந்த பிரான்சு, சாகசம்செய்யும் ஸ்பெயின், ஆகிய நாட்டுப்பட்டாளங்கள், பிரான்சிலே, ஜெர்மனியிலே, போலந்து பெல்ஜியம், நார்வே டென்மார்க் ஆகிய நாடுகளிலே உள்ள தொழிற்சாலைகள் செய்து குவிக்கும் ஆயுதங்களுடன் தாக்குவதைத் தாங்குவது! வீரத்தை உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டிய மாஸ்கோவை நேரிலேகண்ட சர்ச்சில், ஸ்டாலினுடன் நேரடியாகப் பேசிய சர்ச்சில், ரஷியாவின் நிலைமையை நன்கு தெரிந்துகொண்டிருப்பார் என்று நாம் நிச்சயமாக நம்புகிறோம். எனவே, விரைவில், இரண்டாம் போர்முனையைத் துவக்குவார் என்று எதிர்பார்க்கிறோம்.

வீரர் கோட்டமாகவுள்ள மாஸ்கோவை 1947ல் காணவிரும்பிய சக்லத்வாலா காணமுடியாதபடி, மறைந்துவிட்டார். இரண்டாம் போர்முனை துவக்கி, ஜெர்மனியைத்தாக்கி, சோவியத்நாட்டின் நெருக்கடியைப் போக்கி, நாஜி ஆதிக்கத்தை ஐரோப்பாவிலிருந்து நீக்கி, நேசநாடுகளின் வெற்றிக்கொடி பறக்க, பிரிட்டன், முனையுமேல், சக்லத்வாலா காணவிரும்பி, ஆனால் காணாமற்போன, மாஸ்கோவை 1947ல், உலகின் பல பாகங்களிலிருந்தும் பல அறிவாளிகள் கண்டு, புத்தறிவுகொண்டு, சமதர்ம உளம் பெற்று, உலகைப்புன்னகைப் பூந்தோட்டமாக்க முடியும்! முதலாளித்துவம் எனும் கொந்தளிக்கும் கடலிலே, சிக்கித் தவிக்கும் "அரசு" எனும் மரக்கலத்தை, அமைதி, ஆனந்தம் எனும் துறைமுகத்திலே வந்துதங்குமாறு அழைத்த கலங்கரை விளக்கு மாஸ்கோ! அந்த விளக்கு சோவியத்மக்களின் இரத்தத்தை எண்ணெயாக ஊற்றி அவர்களின் நரம்புகளைத்திரியாக அமைத்து, இலட்சியம் எனும் தீக்குச்சிகொண்டு, புரட்சிவீரர், புத்துலகச்சிற்பி, பாமரரின் ரட்சகர், பாட்டாளி மக்களின் தந்தை, வாலிப உள்ளத்தின் கர்த்தா, லெனின், ஏற்றிவைத்தார்!

மாஸ்கோ புதுமையை வரவேற்று உபசரிக்கும் சமதர்மச்சித்திரம்! அதனை மண்மேடாக்கி, அதன்மீதோர் மட அரசு அமைக்கத் துடிக்கும் மதிகேடரை மண்கவ்விடச் செய்ய, மாவீரர் அனைவரும், தோள் தட்டி, கச்சையை வரிந்து கட்டிநிற்கின்றனர். இரண்டாம் போர்முனையிலே இறுதிப்போர் நடத்திடத் தீர்மானித்துள்ளனர். திக்கெட்டும் திகைக்கிறது இன்று! தீரமான போரிடத்துடிக்கின்றது. இதனை உணர்ந்து பிரிட்டன், இரண்டாம் போர்முனையை உடனே துவக்கவேண்டும். சர்ச்சிலின் மாஸ்கோ விஜய, பலன் இரண்டாம் போர்முனையாகத் தான் இருக்கவேண்டும்.

## நீத்தார் நினைவு.

'தமிழரசு' பத்திராதிபரும், சித்தவைத்தியருமான டாக்டர் **மெ. மாசிலாமணி** அவர்களின் அண்ணனார், திரு. **மெ. பாலசுந்தர முதலியார்** அவர்கள் காலமானதை முன்னிட்டு, காஞ்சிபுரம் ராஜகோபால கலியாண மண்டபத்தில் 20—8—42 வியாழக்கிழமை காலை, நீத்தார் வழிபாடு நடைபெற்றது. சென்னையிலிருந்து தோழர்கள் திரு. வி. கலியாணசுந்தரனார், வித்வான் ராஜமாணிக்கம், திருவொற்றியூர் ஷண்முகம் அவர்கள் ஆகியோரும் மற்றும் பல உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

மறைந்தவரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, கூட்டத்திற்குத் தலைமைதாங்கி நடத்தித் தரும்படி, தோழர் அண்ணாத்துரை. திரு. வி க. வைக் கேட்டுக் கொண்டார்.



மெ. பாலசுந்தரனர்.

திரு. வி க. மறைந்த பாலசுந்தரனாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து, அவரது அரிய குணங்களை விளக்கிப் பேசியதுடன், பழந்தமிழ் நூற்கருத்துக்களை அழகுற எடுத்துக் கூறினார்.

வித்வான் ராஜமாணிக்கம் அவர்கள், ஆராய்ச்சி நிரம்பிய சொற்பொழிவாற்றி, தமிழருக்கு ஆரியச் சடங்குகள் கூடாதென்பதை எடுத்துக்காட்டினார்.

கவி பாரதிதாசன் இயற்றிய இறங்கற்பாவும், டாக்டர் மாசிலாமணியாரின் குமாரர் செல்வ அரசு இயற்றிய பாவும், தோழர் பரந்தாமனாரின் பாவும், காஞ்சி வித்வானின் கவிதையும், வாலாஜாபாத் இந்துமத பாடசாலையாரின் எழுத்தோவியமும் வாசிக்கப்பட்டன.

வாலாஜாபாத் பாடசாலைக்கு 50 ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

அதற்குத் தோழர் W. T. மாசிலாமணியார் நன்றி கூறி, கல்விச்சாலைகளுக்குத் தனவந்தர்கள் கனிவுடன் உதவி செய்யவேண்டியதனை உருக்கமாக எடுத்துரைத்தார்.

விருந்துக்குப் பிறகு மாலை 4-மணிக்குமேல் நடந்த கூட்டத்தில், தோழர்கள் அண்ணாத்துரை, கண்ணபிரான் பிள்ளை, சின்னப்பா, தங்கவேலர், S. V. லிங்கம் ஆகியோர் பேசினர்.

டாக்டர் மாசிலாமணி அவர்கள் வந்தனங்கூறிய பின்னர், கூட்டம் இனிது கலைந்தது.

## போர்வீரர்களுக்கு உதவி.

மே. த. கவர்னர் அவர்களின் ரேடியோ சொற்பொழிவுக்கேற்ப, 7—8—42 மாலை 5-30 மணிக்கு காஞ்சீபுரம் ஆடிசன்பேட்டையில், சப்கலைக்டர் தலைமையில், சோல்ஜர்களுக்கு வசதிகள் செய்து தருவதற்கு நிதி திரட்டவும், அதுசம்பந்தமாக மக்களுக்கு விஷயத்தைக் கூறவும் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பரவஸ்து ராஜகோபாலாச்சாரியார், C N அண்ணாத்துரை வக்கீல் சுந்தரராஜயங்கார், சின்னய்யா முதலியார், A. K. தங்கவேலர் ஆகியோர் பேசினர்.

மேற்படி நிதிக்கு அப்போதே 150 ரூபாய் தருவதாகத் தோழர். தங்கவேலர் முன்வந்தார்.

தலைவரின் முடிவுரை, வந்தனக்கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

5ம் பக்கத் தொடர்ச்சி. கலிங்க ராணி.

யில்லை. என் நிலைக்காக நான் நாணிடவும் வேண்டியதில்லை. என்னை நான் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறேன். நீ உன்னையார் என்று தெரிந்துகொள்" என்று அதிகக் கோபத்துடன் பேசிவிட்டு, "தேவி! இன்று முதல் நான் வெளியே விடுதி ஏற்படுத்திக்கொண்டு வாழ விரும்புகிறேன். உத்திரவு தரவேண்டும்" என்று அம்மங்கையைப் பணிவோடு கேட்க, அம்மங்கை, திகைத்து நிற்கையிலே "ஆமாம்! தனி ஜாகை அவசியந்தான் உனக்கு. சதிகாரர்கள்கூடிட இரகசியஇடம் வேண்டாமோ?" என்று பாலா கூறினாள்.

"என்னடி, உளறுகிறாய்?" என்று அம்மங்கை அதட்டினாள். பயந்தவள் போல் பாலா பாசாங்கு செய்துகொண்டு, "மன்னிக்க வேண்டும். கோபத்தால் ஏதோ கூறிவிட்டேன். நான் அதைக் கூறியிருக்கக் கூடாது. என் மனதிலேயே போட்டு வைத்திருக்க வேண்டியதைக் கொட்டி விட்டேன். அதைத் தயவு செய்து மறந்து விடுங்கள்." என்று கூறினாள். அம்மங்கை ஒன்றும் புரியாமல், பாலாவின் கரத்தைப் பிடித்திழுத்து கடுங்கோபத்துடன், "விளையாடாதே! உண்மையை ஒளிக்காதே. சதிகாரர் என்று யாரைக் கூறினாய்? நடனாவுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? இப்போதே கூறு. இல்லையேல் நான் உன்னைத் தண்டிக்க ஏற்பாடு செய்வேன்" என்று மிரட்டினாள்.

"ஐயய்யோ! இதென்ன எனக்கொன்றும் புரியவில்லையே" என்று கைபிசைந்து நின்றாள் நடனம்.

கங்கா, "தேவி! என்னை என்னவேண்டுமானாலும் செய்யுங்கள் நான் மட்டும் அதனைக் கூறவே மாட்டேன். அதனால், பலருக்குக் கேடுவரும். அந்தப்பாபம் எனக்கு வேண்டாம். என்னை வேண்டுமானால் வேலையைவிட்டு நீக்கி விடுங்கள்" என்று பிடிவாதமாகப் பேசவே, மேலும் கோபமுற்ற அம்மங்கை, "உண்மையைக் கூறு." என்று உரத்துக் கூவினாள். "எப்படிச் சொல்வேன். தேவி! என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நடனாவும் விரமணியும் தங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்கள். நான் கூறுவதைக் கேட்டாலோ அவர்கள் இருவரையும் தூக்கு மேடைக்குத் தாங்கள் அனுப்புவீர்கள்" என்றாள் பாலா. அம்மங்கை மிரண்ட பார்வையுடன் நடனத்தை நோக்க, நடனம் நீர் வழியுங் கண்களுடன், "பாலா! என்ன பழியையடி சுமத்தப் பார்க்கிறாய். கள்ளி! காதகி!" என்று கூக்குரலிட்டு நின்றாள்.

"நானா கள்ளி! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் நீ உத்தமி, உன் கபடத்தை வெளிப்படுத்தப் போகும் நான் கள்ளியா! கேள், தேவி! வீரமணியும் நடனமும், பேசிக் கொண்டிருந்ததை நான் ஒரு நாள் மறைந்திருந்து கேட்டேன். குலோத்துங்க சோழன் பட்டத்துக் குரியவரல்லவாம். அவரைக் கவிழ்த்துவிட்டு, பழய மன்னரின் வார்சாக உள்ள வேறு யாருக்கோ, பட்டம் சூட்டப் போகிறார்களாம். மணி இதற்காகவே படையிலே சேர்ந்து, பக்குவமாக நடக்கிறாராம். இவள் அரண்மனையிலே இருப்பதும் இதற்குத் தானாம். இவர்களுக்கு உதவியாக ஊரிலே யாராரோ இருக்கிறார்களாம்" என்று பெரியதோர் பழியைப் பாலா சுமத்தினாள்.

"பேயே! நான் இதனைத் துளியும் நம்பமாட்டேன்" என்றாள் அரசிளங்குமரி.

"அதனை நானறிவேன் அம்மையே! நடனத்தின் நடிப்பு உங்களை ஏமாற்றி இருப்பதை நான் நன்கு அறிவேன். என் பேச்சை நம்பவேண்டாம். தயவு செய்து, வீரமணி தந்தனுப்பினானே கிளி, அதைப் போய்க் கேளுங்கள்" என்றுரைத்தாள் பாலா.

"பித்தமா இவளுக்கு? சதி என்கிறாள், கிளி என்றுரைக்கிறாள். என்னடி சொல்லும் கிளி? சொன்னதைச் சொல்லும்." என்றாள் அம்மங்கை.

"ஆமாம்! சொன்னதைத்தான் சொல்கிறது. வீரமணி சொல்லிக் கொடுத்ததைச் சொல்கிறது. அதைப் போய்க்கேளுங்கள், யார் என் மனைவி?" என்று, உடனே அம்மங்கை என் மனைவி என்று கூறும். நடனாவின் உதவியைக் கொண்டு, வீரமணி சதி செய்து, அரசைக் கைப்பற்றி, தங்களையும் கைப்பற்றிவிடக் கனவு காண்கிறான். தனிமையில் கிளியுடன் பேசியிருக்கிறான்போல் தோன்றுகிறது. நான் அகஸ்மாத்தாய் இதைக் கண்டுபிடித்தேன். கிளியை எடுத்துவரச் சொல்லுங்கள்" என்றாள்.

"விந்தையான பேச்சு! போடி, கிளியை எடுத்துவா இப்படி" என்று ஒரு சேடிக்கு அம்மங்கை கட்டளையிட்டாள்.

ஓடிச்சென்ற தோழி, கிளியின் உடலைத் தான் எடுத்து வந்தாள். கிளி செத்துக்கிடந்தது.

"சரி! ஆரம்பமாய்விட்டது சதி! தேவி! நடனம் இதைக் கொன்றுவிட்டிருக்க வேண்டும். விஷயத்தை மறைக்கவே கிளியைக் கொன்றுவிட்டாள்." என்றாள் பாலா.

அம்மங்கை, ஓங்கி கங்காவின் கன்னத்தில் அறைந்து, "என் முன் நில்லாதே! ஓடு! என் அருமைத்தோழியின்மீது வீணை விபரீதத்தைச் சாட்டினாய், கிளியை நீதான்கொன்றிருக்கவேண்டும். கிளியையும் கொன்று, கட்டுக்கதையையும் புனைந்துபேசுகிறாய். உங்கள் புராணத்திலே நடப்பது போலவே நீ நடந்துகொண்டாய். பொல்லாங்குக்காரி! நீ ஒரு பெண், ஆகவே உன்னைத் தூக்கிலிடச் செய்ய என் மனம் வரவில்லை. போய்விடு அரண்மனையை விட்டு" என்று கூறிவிட்டு, தேம்பிநின்ற நடனத்தை அணைத்துக்கொண்டு, "சீ முட்டாளே! எவளோ ஒருவள் ஏதோ சொன்னால், நான் நம்புவேனோ! அவள் உறவே இனி நமக்கு வேண்டாம். வா, நாம் போவோம்" என்றுகூறி, நடனத்தை அழைத்துக்கொண்டு அந்தப்புறம் போய்விட்டாள்.

கங்கா அழவில்லை! சிரித்தாள். விதை தூவிவிட்டோம். அறுவடைக்குக்காலம் இருக்கிறது என்று மனதிற்குள் கூறிக்கொண்டு, அரண்மனையைவிட்டு வெளி ஏறி, அந்தணர் வீடுகள் இருக்கும் பக்கம் நடந்தாள். (தொடரும்)

## திருமணத் திருமுகம்.

திருப்பூர் தோழர் S. சின்னசாமி செட்டியார்
திருக்குமாரியும் T. K. S. சகோதரர்களின்
M. S. B. S. சபா நடிகையுமான
தோழியர்
**M. S. திரௌபதி அம்மைக்கும்**
திரு. K. சவுண்டப்ப செட்டியார் திருக்குமாரர்
தோழர்
**பெரியசாமி செட்டியாருக்கும்**

23—8—42, ஞாயிற்றுக்கிழமை காலை, மண்டகந் தோப்பு; முத்தரச நல்லூர், மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறுகிறது. அன்பர்கள் அழைக்கப் படுகின்றனர்.

## திருமலை ராஜன் பட்டிணம்

மேற்படி யூரில் நிருவப்பட்ட முஸ்லீம் வாலிபர் சங்கக் கூட்டம் 30—7—42ல் நடைபெற்ற போது, மேற்படி சங்கத்துக்கு அங்கீகாரமளித்த பிரன்ச்சிந்திய கவர்னர் அவர்களைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுடன், சங்க நிர்வாகஸ்தர்கள் தேர்தலும் நடைபெற்றது.

2ம் பக்கத் தொடர்ச்சி.

24-மணி நேரத்தில்

முஸ்லிம் முதலாளிகளோ அல்லது ஹிந்து முதலாளிகளோ செல்வத்தில் செழிப்படையும்படி செய்வது என் நோக்கமல்ல. ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லீம்களாயினும்சரி, பாமரமக்களின் பொருளாதார அபிவிருத்திக்காக சேவை செய்யவேண்டுமென்பதே என்திட்டமான நோக்கம். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின்றி இது சாத்தியமில்லை.”

இப்போது என்ன சொல்கிறாய்? அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே தோழர் ஜெகத் நாராயண் பாகிஸ்தானை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். அதை ரத்துசெய்து விட்டு, சமரசம் உண்டாக்கி விட்டால், சுதந்திரப் போராட்டம் நடத்த நான் தயார் என்று ஜனாப் ஜின்னா கூறுகிறார். பாகிஸ்தான் அமைக்கும்போது, முஸ்லீம்களிடையே ஓட் எடுக்கலாம் என்றும் கூறுகிறார். இதைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டால், சிறைபுகவும் தயார் ஜின்னா! தோழனே! நாட்டிலே ஒற்றுமை உண்டாகவும், சுதந்திரப் போரை நாட்டு மக்கள் ஒன்றுகூடி நடத்தவும் இதைவிட அரிய சந்தர்ப்பம் இராது.

* * * * *

நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட காங்கிரஸ் தோழர் ஒருவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை, நான் மேலே தந்தது. ஜனாப் ஜின்னாவின் அறிக்கையை நான் விளக்கினேன், வாதிட்டேன், வீண்கலவரத்திலே விருப்பம் வைத்துப் பயனில்லை என்று சொன்னேன். என் நண்பரின் நினைவு பூராவும், நாட்டிலே நடைபெற்று வரும், நாசவிசமான கலவரங்களிலே ஓடிற்றே யொழிய, நான் சொன்னவற்றால் திருப்தி அடையக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் ஒன்று நானறிவேன். இந்த வேகம் குறைந்து, என் தோழர்கள் ஆர அமர யோசிக்கும் சமயம் வந்து கொண்டு இருக்கிறது. அது போது, இது போன்ற யோசனை எழப்போவது உறுதி. இல்லையேல், இந்தக் கலவரங்களினால் நாடு ஒரு களமாகும், காட்டு ராஜாக்கள் கிளம்பும் காலம் போன்றிருக்கும், கையில் வலுத்தவனின் காரியம் நடக்கும், வெள்ளையனை ஓட்டும் கிளர்ச்சி என்று எண்ணி இன்று மகிழ்வோரும், மருண்டு, தலைமீது மோதிக்கொள்ளும்படி, சொத்து சூறையாடலும், குத்து வெட்டுகளும், கொள்ளை கொடுமைகளும், நடைபெற்று அமைதி அழிந்து; போக மார்க்கம் தோன்றக் கூடுமேயன்றி, நாட்டுக்கு விமோசனம் எழாது என்பது உறுதி. நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்டோரின் நல்லெண்ணங்கள் இன்று சந்தேகிக்கப் படலாம். ஆனால் உண்மை ஒருநாள் வெளிவந்தே தீரும்.

* * * * *

**சர்தார்குல்பீர்** சிங்:—“சரி! தோழனே! அஹ்ரார்கள் செல்வாக்கு எந்த இடத்திலே வளர்ந்தாலும், உடனே, முஸ்லீம்கள் இந்துக்கடைகளைப் பகிஷ்கரிக்கிறார்கள்? புதிய முஸ்லீம்கடைகள் திறக்கப்படுகின்றனவே? இதுஎன்ன?

**அப்ஜால்** ஹக்:—இது சகஜந்தானே தோழனே! ஒரு சமுதாயத்திக்கு அறிவூட்டினால் அது, தன் நிலைமையை உணர ஆரம்பிக்கிறது, தனக்கிருக்கும் சங்கடம், சஞ்சலம் ஆகியவற்றுக்குக் காரணம் என்ன என்று யோசிக்கிறது. இவ்விதம் யோசிக்கும்படி அஹ்ரார் இயக்கம் தூண்டுகிறது. இவ்விதம் முஸ்லீம்கள் யோசிக்கும்போது, தங்களுக்கிருக்கும் வேதனைக்குக்காரணம், வெள்ளைக்காரனைவிட இந்துக்களாலேயே அதிகம் என்று ஏற்படுகிறது. ஆகவே முஸ்லீம் சமுதாயம் விழிப்படைகிறது. தன்னைத்தீண்டாதவனாகப் பாவிக்கும் இந்துவின் ஆதிக்கத்தை அறுத்துவிட முனைகிறது. இது சகஜந்தானே.

**சர்தார்குல்பீர்** சிங்:—உண்மைதான்! இந்து சமுதாயம் அப்படித்தான் செய்கிறது. என் செய்வது? என்று தீருமோ இந்தக்குறைபாடுகள்?

இந்தச்சம்பாஷணை, ராவல்பிண்டி சிறைச்சாலையிலே இரு வாலிபருக்குள் நடந்தது. ஒருவர் முஸ்லீம், மற்றொருவர் இந்து. சர்தார் குல்பீர்சிங் என்ற இந்து சாமான்யமானவரல்ல, சர்க்கார் தாசரல்ல, பகத்சிங்கின் சகோதரர்! அப்ஜால்ஹக், என்ற முஸ்லீமும், காங்கிரஸ் வைரியல்ல. அஹ்ரார் இயக்கத்தலைவர், காங்கிரசை ஆதரிப்பவர், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டவர்; சிறையிலே, நாட்டின் பிரச்னைகள் பற்றி சிந்தித்தவர், பாகிஸ்தான் கோரிக்கை பற்றிப் பன்னிப்பன்னிப் பேசியும் விவாதித்தும் விளக்கம் பெற்றவர், அவர் இந்துக்கள் முஸ்லீம்களைத் தீண்டாதார் போல் நடத்துவதை முஸ்லீம் சமுதாயம் வெறுக்கிறது என்ற விஷயத்தை, பகத்சிங்கின் சகோதரரிடம் ராவல் பிண்டி சிறையிலே பேசினார். பாகிஸ்தானமும் தீண்டாமையும் என்ற ஓர் புத்தகத்தை 1940-ம் ஆண்டு ராவல்பிண்டி சிறையிலேயே எழுதினார். அதிலே இருக்கிறது நான் மேலே தீட்டிய உரையாடல். அதுமட்டு மல்ல இந்து முஸ்லீம் இனவேற்றுமை பற்றி பல அரிய, அனுபவ பூர்வமான உதாரணங்களும் உள்ளன.

பாகிஸ்தான்கேட்கும் மனப்பான்மைக்குக் காரணம் என்னவென்றுகேட்போர், இந்து, முஸ்லீம் இனத்தின் பேதமும், இருஇனத்திற்கு இருந்துவந்த, இருந்துவரும், இருக்கக்கூடியதொடர்புஎத்தன்மையதுஎன்பதையும்தெரிந்துகொள்ளமறுக்கிறார்கள். அவர்கள்நாட்டிலே உள்ளசமுதாயத்தை மறந்து, எட்டிலேஉள்ளசித்திரத்தைமட்டுமேகண்டு, ஏங்கி, எட்டாதபழத்திற்குக்கொட்டாவி விடுகிறார்கள். அவர்களுக்கு ஜனாப்ஜின்னா, விளக்கம் ஏற்பட, சென்ற வாரம், ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபரிடம் பேசுகையில், முஸ்லீம், இந்து, இனவேறுபாடுபற்றிக் கூறி, யிருக்கிறார். ராவல்பிண்டி சிறையிலே, பாதுகாப்புச் சட்டப்படி கைதாகியிருந்த அஹ்ரார் அப்ஜால் ஹக் கூறினதற்கும் காயிதே அஃலம் கூறுவதற்கும் மாறுபாடு இல்லை. முஸ்லீம்களை இந்துக்கள் தீண்டாத ஜாதி போலவே கருதுகிறார்கள் என்பதை ஜனாப்ஜின்னா அமெரிக்க நிருபரிடம் தெளிவுபடக் கூறினார் “என் கையால் தொடப்பட்ட ஜலத்தை இந்து சாப்பிட மாட்டார். அவருக்கு அது ஆச்சாரக் குறைவு” என்று ஜனாப் ஜின்னா கூறினார். இதைக்கூறுகையில், அவருடைய மனம் எவ்வளவு வேதனையுடன் இருந்திருக்கும். யாவரும் சமம் என்ற மெய்ஞ்ஞான போதகராம் நபிகள் நாயகத்தைப்பின் பற்றும் ஜனாப் ஜின்னா, எங்ஙனம் இத்தகைய பேதத்தைக்கண்டு சகிக்கமுடியும்! அறிவுள்ள எவர் தான் இந்த அக்ரமத்தைப் பொறுத்துக் கொள்ள முடியும்? ஆனால், அதோ ரயிலைக் கவிழ்த்தும் தபாலாபீசைத் தீக்கிரையாக்கியும், தண்டவாளத்தை அகற்றியும், சுயராஜ்யம் தேடும் தோழர்கள், இதனை உணரமறுக்கிறார்கள். தம்முடன் சேரமறுப்பவரை, சர்க்கார் கூலிகள் என்றும், சுயராஜ்யத்தை வேண்டாதவர்கள் என்றும் தூற்றுகின்றனர்.

சுயராஜ்யம் வேண்டுமா? என்று என்னைக்கேட்டால், “ஆம்! நிச்சயம் வேண்டும். விரைவில் வேண்டும்.” என்று தான் கூறுவேன், உரிமை வேண்டாமென்று கூறிடும் உலுத்தன் எவன் இருக்கமுடியும்? எவனுடைய இரத்தத்தில், வீரமும் விறுவிறுப்பும், ஓடுகிறதோ, எவனுடைய இருதயத்திலே சுதந்திர எண்ணம் கொந்தளிக்கிறதோ, அவன் சுதந்திரத்தை வேண்டாமென்றுரைக்க மாட்டான். நாமார்க்குங் குடியல்லோம் என்று மார்தட்டியே நிற்பான். நமது நாட்டை மற்றொருவன் ஆள்வதா என்று சீறுவான். என் உடலம், பருந்துக்கும் நரிக்கும் இரையாகட்டும், கவலையில்லை என்றே கர்ஜிப்பான். இந்த எண்ணம் இயற்கை! இது அடக்க, அழிக்க, மறைக்க மறுக்க, மறக்கமுடியாது. நம்மை ஆள்வோராகிய வெள்ளையரும் இதனை மறுக்கத்துணியார் மறுக்க

வில்லை. அவர்கள் ஒரு காலத்தில் ரோம் நாட்டு ராணுவ ஆட்சியின் கீழ் இருந்தனர். அவர்கள் நாட்டு ராணி பொயடிஷியாவை, மரத்திலே கட்டிவைத்து அடித்தார்கள் என்று கதை உண்டு. அவர்கள் தங்கள் சுதந்திரத்துக்காக, பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அவர்கள் நாட்டுச் சரிதம் நானறியாததல்ல. அதை வெள்ளையர்கள், நாம் படித்துணரவும் செய்துள்ளனர். எனவே சுதந்திரத்தை நான் மறவேன், நீதிக்கட்சி, குடியேற்ற நாட்டு அந்தஸ்து போதும் என்ற கொள்கையை விட்டு, நாட்டுக்குப்பூரண சுயேச்சை தேவை என்ற தீர்மானத்தை ஏற்று, பெரியாரின் தலைமையின் கீழ்நின்று பொதுஉடைமை திட்டமோ என்று மூர்த்திகளும் சாஸ்திரிகளும் கூறி, சர்க்காரிடம் சாடிசொல்லவேண்டிய அளவு தீவிரமுள்ள வேலைத்திட்டத்தையும் கட்சி ஏற்றுக்கொண்டபிறகு, அக்கட்சியிலே, இருக்கும், எவரும் சுதந்திரத்தை மறுப்பவராக இருக்கமுடியுமா? சுதந்திரத்தையே ஜீவநாடியாகக் கொண்டுள்ள இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய எட்டு கோடிக்கு மேற்பட்ட நமது முஸ்லீம் தோழர்கள் சுதந்திரத்தை மறுப்பவர்களா? காங்கிரசின் வயப்பட்டவர்கள், நம்மையும், இஸ்லாமியரையும், சுதந்திர எதிரிகள் என்று கூறுவது துளியும் பொருந்தாது. உரிமைப்போர் நடத்த இந்த இரு இனமும் என்றும் தயார்! இன்றும் சரியே! நான் கூறுகிறேன் காங்கிரஸ் தோழர்களுக்கு, உரிமைச்சாசனம் தயாரித்துக்கொள்வோம், பிறகு போர்த்திட்டம் அமைப்போம், போரில் இறங்குவோம். சம்மதமா? என்று கேட்கிறேன். இதோ நான் தீட்டும் சாசனம் காங்கிரஸ் தோழர்கள் கூர்ந்து நோக்கவேண்டுகிறேன்.

1. வெள்ளையர் ஆட்சிநீங்கி நாட்டுஆட்சி நம்மிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

2. இந்து, முஸ்லீம் இனங்கள், மதம், கலை, நாகரிகம், இலட்சியம் முதலிய அடிப்படையான கருத்துக்களிலேயே மாறுபட்டும், முரண்பட்டும், ஒன்றின் மீதொன்று மோதக் கூடியதாகவும், இருப்பதால், ஓரே குடும்பமாக வாழ, கூட்டாக ஆள இயலாது ஆகையால், அவரவர்கள் பெருவாரியாக உள்ள இடங்களிலே, அவரவரின் சுயேச்சையான ஆட்சி ஏற்படுத்திக்கொள்ள உரிமை வேண்டும்.

3. ஆரிய, திராவிட, கலை நாகரீக இலட்சிய வேறுபாடு, விரோதத்தையும் துவேஷத்தையும் மூட்டுவதாக இருப்பதால், திராவிடர் பெருவாரியாகஉள்ள நாட்டிலே ஆரிய ஆதிக்கம் ஏற்படமுடியாதபடி, அங்கு திராவிட ஆட்சி அமைத்துக் கொள்ளத் தனி சுதந்திர அரசுரிமை அமைக்கப்படவேண்டும்.

4. நாட்டுப் பழங்குடி மக்களைத் தீண்டாதார் என்று கூறி உரிமையை மறுக்கும்கொடுமை களையப்பட்டு, பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை, பேதம்காட்டப்படமாட்டாது என்று சட்டம் ஏற்படுத்திவிட வேண்டும்.

5. தொழிலாளர், முதலாளி பிணக்கு ஏற்படவும், அதைத் தீர்க்க முறைகள் பல கையாளப்படுவதுமான தொல்லைகள் களையப்பட, பொருளாதார நீதி ஏற்பட, சர்க்காரே, தொழிற்சாலைகள், பெருவாரியான பண நடமாட்டமுள்ள உற்பத்தி ஸ்தாபனங்கள் ஆகியவற்றை ஏற்று நடத்திவரவேண்டும்.

6. சமுதாய சமத்துவம், பொருளாதார நீதி ஆகியவற்றைக் குலைக்கக்கூடிய கருத்தைக்கொண்ட மதம், தடுக்கப்படவேண்டும்.

இவைகள் நான்விரும்பும் உரிமைகள். இதோ கேண்மின், ஜனாப் ஜின்னா கூறுவதை "முஸ்லீம் முதலாளிகளோ அல்லது இந்து முதலாளிகளோ செல்வத்தில் செழிப்படையும்படி செய்வது என் நோக்கமல்ல இந்துக்களாயினும் சரி, முஸ்லீம்களாயினும் சரி, பாமர மக்களின் பொருளாதார அபிவிருத்திக்காகச் சேவை செய்யவேண்டுமென்பதே என் திட்டமான நோக்கம்."

இந்த வாசகத்திலே உள்ள உணர்ச்சியை மறக்க முடியுமா!

சுதந்திரப்போர் நடத்த, சமதர்மத்தை நிருவ, ஜனாப் ஜின்னா தயார்!

போருக்குப்பிறகு பிரிட்டன் சுயராஜ்யம்தராமல் ஏமாற்றமுடியாது. அங்ஙனம் நடக்குமாயின், நமக்கு பிரிட்டனை எதிர்த்தே சுயராஜ்யம்பெறும் சக்தி போர் முடிந்ததும் ஏற்பட்டுவிடும்.

நேசநாடுகள் அதுசமயம் நம்மை ஆதரிக்கும். சுயராஜ்யத்தை எந்தக் கட்சியும் வேண்டாமென்று கூறவில்லை. எல்லா கட்சிகளும் சுயராஜ்யம் கோருகின்றன. எந்தக் கட்சிக்கும் வெள்ளையரிடம் காதல்கிடையாது. எல்லாகட்சிகளுக்குள்ளும் ஒற்றுமைஏற்படவேண்டும்.

அதற்கு இனஉரிமைகள் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

இனஉரிமைதான் பாகிஸ்தான் திராவிடஸ்தான் கோரிக்கைகள். போர்முடிந்து ஏற்படும் புதிய அரசியலில் இவை இருக்கலாம் என்று காங்கிரஸ் கூறினால், இன்று சமரசம் ஏற்பட்டுவிடும்.

சமரசம் ஏற்பட்டதும், வெள்ளையரை, நாடு நிமிர்ந்துநின்று என்னசொல்லுகிறாய் என்றுகேட்கும்.

உங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்ட பிறகு, நான் சுயராஜ்யத்தை மறுக்கமுடியாது. சுயராஜ்யத்தைத் தருகிறேன். நான் போகட்டுமா? என்று வெள்ளையர் கேட்பர். 150 ஆண்டுகளாக எங்களை நிராயுதபாணிகளாக வைத்துக்கொண்டிருந்தாய், எங்கள் நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறினாய், எங்கள் நாட்டு வரிப்பணம் கோடி கோடியாக ராணுவத்திற்காகத் தந்தோம் இத்தனை ஆண்டுகளாக. ஆகவே எதிரியைத் தோற்கடிக்கும்பொறுப்பு, கடமை, உன்னுடையது. அதை வெற்றிகரமாகச் செய்துவிட்டுப்போ, என்று நாடு கூறும்.

நேசநாடுகளின் பக்கம் நம்நாடு! நேசநாடுகள் எவை! நமது இருதயத்தைக் கொள்ளை கொண்ட, இகத்தில் இன்பம் உண்டு, எவருக்கும் உண்டு, என்ற சித்தாந்தத்தின் சிங்காரச் சோலை, ஜெகம் புகழும் வீரர் கோட்டம், பாட்டாளியின் பரிபாலன பூமி, வேலை இல்லை, கூலிஇல்லை, என்ற பேச்சு எழாத பெருமித ஆனந்தபுரி, சோபிதமிக்க சோவியத்ரஷியா சிதையா வீரத்தின் சிகரமாக விளங்கும் சீனா, இவைகள் உள்ளன!

இதைத்தெரிந்து, தெளிவுகொள்ள வேண்டும் தோழர்கள்.

வாசலிலே உள்ள பூனையை விரட்டப்போகிறோம்! புறக்கடைக்கதவு திறந்திருக்கிறது அங்கோர் ஓநாய், இரத்த வெறியுடன் நிற்கிறது! அதுஉள்ளே நுழையக்கூடாதே!

எதிரியின் எக்காளம், வங்கக்கடல் அலையுடன் கலந்தடிக்கிறதே, இந்த வேளையிலா, நாட்டிலே இந்த வேதனைமிகும் விளைவுகள்?

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51, Nimauthakara Street, L. Conjeeveram.